# கல்வெட்டு

திருவள்ளுவராண்டு 2033 (விசு ஆண்டு) பங்குனித் திங்கள்



நாகைநல்லூர் வணிகக் கல்வெட்டு
10-ஆம் நூற்றாண்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம்

காலாண்டிதழ் - 56 (2002, ஏப்ரல் திங்கள்) விலை ரூ. 1-50
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

உள்ளே......


பக்கம்

1. நாகை நல்லூர் வணிகக் கல்வெட்டு ... 1
— கி. ஸ்ரீதரன்

2. ஏகாலியர் ஊர் மடம் என்ற உமிக்கரி மடத்துக் கல்வெட்டு
— தே. கோபாலன் ... 4

3. பல்லவர் கால அரிய ஜேஷ்டா சிற்பம்
— அர. வசந்தகல்யாணி ... 7

4. பொய்கையார் - புதிய பெயர்க் காரணம்
— எஸ். சௌந்தரபாண்டியன் ... 9

5. கூகையூர்
— ச. செல்வராசு ... 11

6. Navagrahas in Hindu-Mythology & Iconography
— M. Chandramoorthy ... 18

7. சோழர் வரலாற்றில் புதிய ஒளி
— டாக்டர் ஆ. பத்மாவதி ... 29

8. அலுவலக நடவடிக்கை குறிப்புகள் I ... 32

9. அலுவலக நடவடிக்கை குறிப்புகள் II ... 37

# நாகை நல்லூர் வணிகக் கல்வெட்டு

**கி. ஸ்ரீதரன்**
பதிவு அலுவலர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம் தொட்டியம் அருகே நாகை நல்லூர் என்ற ஊரில், பண்டையத் தமிழ் வணிகர்களின் படை குறித்த கல்வெட்டு கண்டறியப்பட்டது.

இவ்வூரில் ஏரிக்கரையில் ஒரு மரத்தினடியில் இக்கல்வெட்டு அமைந்துள்ளது. இரண்டு மீட்டர் உயரமும் 80 செ.மீ. அகலமும் உடைய கல்லின் மேல் பகுதியில் கல்வெட்டும், கீழ்ப்பகுதியில் குதிரை மற்றும் பதினோறு படைக் கலன்களின் புடைப்புச் சிற்பங்களும் உள்ளன. இக்கல்வெட்டு ஊர் மக்கள் சிலரால் வழிபடப்பட்டு வருகிறது.

1) ஸ்வஸ்திஸ்ரீ
2) கொற்றவன் கோ
3) முந்நூற்றுவறு
4) க்கு மூத்தாரோம்
5) மக்களோம் ஐம்
6) பெரும்குழுவுக்கு
7) செங்க

கல்வெட்டின் இறுதி வரி தெளிவாக இல்லை. கீழ்ப்பகுதியில் நடுவில் ஒரு சேனத்துடன் கூடிய குதிரையும் அதனைச் சுற்றி அங்குசம், சங்கு, அரிவாள், சுருள் கத்தி, வாள், வில், வேல், அம்பு, கொடுவாள், தண்டம் போன்ற படைக் கலன்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. வரலாற்றுச் சிறப்பு மிக்க இக்கல்வெட்டின் காலம் கி.பி. 10-11 - ம் நூற்றாண்டாகும்.

பண்டைய வணிகர்கள் பல நாடுகள் கடந்து சென்று வியாபாரம் செய்ததால் தங்கள் பாதுகாப்பிற்காகவும் வணிகப்

பண்டங்களின் பாதுகாப்பிற்காகவும் தனிப் படைகளைக் கொண்டிருந்தனர். இப்படைகள் எரிவீரப்படை, மூன்று கை மகாசேனை, வளஞ்சியர் அத்திகோசம் (யானைப் படை) என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டன. இக்கல்வெட்டில் உள்ள ஆயுதங்களின் சின்னங்கள், இக்கல்வெட்டை வணிகர்களின் படைகளைக் குறிப்பிடும் கல்வெட்டாகவே உணர்த்துகின்றன. ஒரு குறிப்பிட்ட படைப் பிரிவினர் இப்பகுதியில் ஏதோ ஒரு கொடையை நல்கியுள்ளனர். பண்டைய நடுகற்களில் இளமக்கள் என்பவர்கள் வீரர்கள் என்பதையே உணர்த்துகின்றன. சித்தன்னவாசல் தமிழ் பிராமி கல்வெட்டிலும் இளையர் செய்த அத்திட்டனம் என்று கூறப்படுவதும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

இக்கல்வெட்டில் காணப்படும் 'ஐம்பெருங்குழு' என்று ஊகிக்கப்பட்டுள்ள சொல் சிறப்பான ஒன்றாகும். மணிமேகலை மற்றும் சிலப்பதிகாரத்தில் அமைச்சர், புரோகிதர், படைத் தலைவர், தூதுவர், ஒற்றர் ஆகிய ஐவர் நாட்டின் நிர்வாகத்திற்கு அச்சாணி போல் செயல்பட்டு அரசனுக்கு உறுதுணையாய் இருந்தவர்கள். இவர்கள் தாம் ஐம்பெருங்குழுவினராகச் சொல்லப் படுகின்றனர். மதுரைக் காஞ்சியில் நாற்பெருங்குழுவினர் குறிக்கப் படுவது இங்கு நினைவு கூரத்தக்கது.

இதே சொல்லை குறிக்கும் கல்வெட்டு ஒன்று கரூர் அருகே முன்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டிலும்,

1. ஸ்ரீ கூற்றருதை கெல்லீ நிறுவனகள
2. கார்த்தி கோச முடைக் கோசமு ஐம்பெருங்கு
3. ழு(வுச)ங்கமு இவை காத்தானடி என்

தலைமே [லன]

*(ARE 64/1890 - S.I.I. Vol IV No : 388)*

'ஐம்பெருங்குழு' என்பது குறிக்கப்படுகிறது. நாகை நல்லூர் ஊருக்கு மூன்று கி.மீ. தொலைவில் ஓடும் காவிரி ஆற்றின் மறு கரையின் சமீபம் கரூர் அமைந்துள்ளது. மேற்கூறிய இரு கல்வெட்டுகளும் அருகருகில் கிடைத்திருப்பது குறிப்பிடதக்கது.

மேலும் இவை பண்டைய வணிக வழிகளில் அமைந்திருப்பதும் சிறப்பாகும். சங்ககாலச் சோழர், சேரர் தலைநகரங்களான உறையூர், கரூர் ஆகியவற்றை இணைத்தும் மேற்கு கடற்கரை நோக்கியும் செல்வதாக ஒரு பெருவழி அமைந்திருந்தது. இப்பெரு வழி 'கொங்கப்பெருவழி' என்றும், பிற்காலக் கல்வெட்டுகளில் 'ஆதன்பெருவழி' என்றும் அழைக்கப்பட்டது. மேலும் பாண்டியர் தலைநகர் மதுரை மற்றும் அதியன் தலைநகர் தகடூர் ஆகியவற்றை இணைத்தவாறு வட இந்திய பகுதிகளுக்குச் செல்ல மற்றொரு பெருவழியும் இருந்தது. இது 'தட்சிணபதம்' எனப்பட்டது. இவ்விரு பெருவழிகளும் கருவூர் அருகே குறுக்காகச் சந்தித்துச் சென்றன. வணிகப்பெருவழிகளான இவை இடைக் காலத்திலும் பயன்பாட்டில் இருந்தன என்பதற்கு காவிரியின் இரு கரைகளிலும் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகள் ஆதாரங்களாக உள்ளன. திருச்சிராப்பள்ளி கரூர் மாவட்டங்களில் துடையூர், சிங்களாந்தகபுரம், கீழக்குறிச்சி, எடமலைப்பட்டிபுதூர், காளியாம்பட்டி, மேல்நங்கவரம் போன்ற ஊர்களிலும் வணிகக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

அடிக்குறிப்பு

நாகைநல்லூரில் காணப்படும் வணிகக் கல்வெட்டு வரலாற்றுச் சிறப்புடையதாக விளங்குகிறது. இப்பகுதியில் மேலும் ஆய்வு செய்தால் வரலாற்றுச் சிறப்பு மிக்க கல்வெட்டுகள் கிடைக்கக் கூடும். திருச்சிராப்பள்ளியில் அமைந்துள்ள கிராமாலயா என்ற சேவை நிறுவனத்தின் இயக்குநர் திரு. எஸ். தாமோதரன் அவர்கள் தந்த தகவலின் பேரில், திருச்சி பதிவு அலுவலர் திரு. கி. ஸ்ரீதரன், கரூர் காப்பாட்சியர் திரு. நாக. கணேசன், பதிவு அலுவலர் அலுவலக உதவியாளர் திரு. ப. இராசேந்திரன் ஆகியோரால் இப்பகுதிக்கு சென்று ஆய்வு மேற்கொண்டு, இக்கல்வெட்டு படியெடுத்து வரப்பட்டது.

# ஏகாலியர் ஊர் மடம் என்ற உமிக்கரி மடத்துக் கல்வெட்டு

**தே. கோபாலன்**
மாவட்டத் தொல்லியல் அலுவலர்,
நாகர்கோவில்

கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் வட்டம் கோட்டாறு சவேரியார் கோயிலுக்கு மேல்புறம் முத்தாரம்மன் கோயில் உள்ளது.

**உமிக்கரிமடம்**

தற்போதுள்ள இவ்வளாகத்தில் முன்பு மடம் ஒன்று இருந்த தாகவும் அதற்கு 'உமிக்கரி மடம்' என்ற பெயர் வழங்கப்பட்ட தாகவும் இப்பகுதி வாழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுசீந்திரம் மார்கழித் திருவிழாவின்போது 3-ஆம் நாள் திருவிழாவன்று குமாரகோயில் சுப்பிரமணியசுவாமி, கோட்டாறு வலம்புரி விநாயகர், மற்றும் மருங்கூர் சுப்பிரமணிய சுவாமி ஆகியோர் கொட்டாரம் வடக்குத் தெருவில், தம் அம்மையப்பரான உமா மகேசுவரரை வலம் வந்து தரிசித்து ஆசி பெற்று பக்தர் களுக்கு காட்சியளிப்பர். இது 'மக்கமார் சுற்று' என்றும் 'மக்கமார் சந்திப்பு' என்றும் அழைக்கப்படுகிறது. பின்பு ஏழு நாட்கள் தாய், நந்தையருடன் இருந்துவிட்டு திரும்புவர். இம்மூன்றாம் நாள் திருவிழாவுக்கு குமாரகோவிலில் இருந்துவரும் சுப்பிரமணியசுவாமி மக்கமார் சந்திப்புக்கு முதல் நாள் இரவு இம்மடத்தில் வந்து தங்கியிருந்து விட்டு மறுநாள் காலை புறப்பட்டு கோட்டாறு சென்று, பின்பு அங்கிருந்து கோட்டாறு வலம்புரி விநாயகருடன் மக்கமார் சந்திப்புக்கு கொட்டாரம் செல்வதாகக் கூறப்படுகிறது, துணிகள் வெள்ளாவி வைக்கப்படும் போது ஏற்படுகின்ற அடுப்பு கரியின் காரணமாகவே 'உமிக்கரி மடம்' என அழைக்கப் பட்டிருக்க வேண்டும்.

## ஏகாலியர் மடம்

தற்போது இவ்வளாகத்தில் "ஸ்ரீசங்கரம் ஏகாலியர் ஊர்வகை மடம்" என்ற பெயரில் அண்மைக் காலத்தில் எழுதப்பட்ட பெயர்ப்பலகை ஒன்று காணப்படுகிறது. சலவைத்தொழில் செய்யும் சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு 'ஏகாலியர்' என்ற பெயருண்டு. இம்மடத்திற்கு வடக்கே தற்போதைய காவல் நிலையம் இருக்கும் பகுதியில் 'கழுதைச்சந்தை' நடைபெற்றதாகக் கூறுகின்றனர். மடத்திற்கு அருகே கழுதைச்சந்தை நடைபெற்ற தால் ஏகாலியர் வந்து தங்குவதற்கான மடமாக இது இருந்துள்ளது என்ற ஒரு கருத்தும் நிலவுகிறது. இதுவே சரியான கருத்தாகத் தோன்றுகிறது.

## கல்வெட்டு

இம்மடத்து வளாகத்தின் வடகீழ் மூலையில் சுமை தாங்கிக் கல் இருந்துள்ளது. இதில் ஒரு கல்லில்தான் கல்வெட்டு பொறிக் கப்பட்டுள்ளது. மற்ற இரு கற்களும் இவ்வளாகத்தினுள்ளேயே காணப்படுகின்றன.

## கல்வெட்டு வாசகம்

1. 995
2. அய்ப்பசி மீ
3. 12 கோட்டா
4. று கண்டான்
5. பூமி வ கெட்டி
6. மகன் பெரு
7. மாள் மட[ம்]தோ
8. ட்டம் ஸ்ரீ
9. குமரன் துணை

இக்கல்வெட்டு 9 வரிகளில் கொல்லம் ஆண்டு 995 - இல் பொறிக்கப்பட்டுள்ளது. இது குறித்துவாப்தத்திற்கு கி.பி. 1820 ஆகிறது. கெட்டி மகன் பெருமாள் என்பவன்

மடம் கட்டி, தோட்டம் அமைத்ததினை குறிப்பிடுகிறது. இம்மடம் கட்டப்பட்ட நிலப்பகுதியைக் கோட்டாறு கண்டான் பூமி என கல்வெட்டு குறிப்பிடுகிறது. கல்வெட்டின் மேல் வேல் பொறிக்கப் கப்பட்டுள்ளது. கீழே குமரன் துணை என்று முடிகிறது. எனவே குமாரகோவில் சுப்பிரமணியசுவாமி வந்து தங்கியதற்கான மடம் (உமிக்கறிமடம்) என்ற நாட்டார் வழக்காறு உண்மையாக இருக்க வாய்ப்பிருக்கிறது.

தற்போது இங்கு மடம் இருந்ததற்கான தடயமேதும் காணப் பட வில்லை. இம்மட வளாகத்திற்கு கீழ்ப்புறமாக தென்-வடலாக செல்லும் பாதை இராசபாதை என அழைக்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டம் உரப் பனவிளை திரு. பொ. பாலசுப்பிரமணியத்தின் மனை வளாகத்தில் உள்ள கற்தூண்.

1. அருளிச் செயல் . . . . .
2. [ெ]பரூர் விளை . . . . .
3. வீர உதைய மாத்தா[ண்]
4. [ட]வர்ம்மர் செய . . . .
5. ஞ் யெரு . . . . . .
6. விரைசி . . . . . . வா
7. யில் பத்து . . . .
8. அச்சச் சன்னாசி
9. பெருவாய் கொ
10. யில் . . . . . . .

கல்வெட்டு பொறிந்தும், நிலத்தில் புதைந்தும் உள்ளதால் முழுச்செய்தி அறிய இயலவில்லை. 18-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ளது.

**தே. கோபால்**
தொல்லியல் அலுவலர்
நாகர்கோயில்

# பல்லவர் கால அரிய ஜேஷ்டா சிற்பம்

அர. வசந்தகல்யாணி
கல்வெட்டாய்வாளர்
தொல்லியல்துறை, சென்னை

சென்னை மாநகர் முத்தியாலுப்பேட்டை புதுத்தெருவிலுள்ள அங்காளபரமேசுவரி கோயிலில் பிற்காலப் பல்லவர் காலத்தைச் சார்ந்த அரிய ஜேஷ்டா சிற்பம் ஒன்று இப்பகுதியில் கள ஆய்வு மேற்கொண்டபோது கண்டறியப்பட்டது. இவ்வரிய சிற்பம் பற்றிய குறிப்புகள் பின்வருமாறு.

சென்னையில் பல்லவர் காலச் சிற்பங்கள் அரிதாகவே காணப்படுகின்றன. அவ்வகையில் இச்சிற்பம் சிறப்புப் பெறுகிறது. அறநிலைய ஆட்சித்துறையின் கீழுள்ள அங்காள பரமேசுவரி கோயில் இப்பகுதி மக்களின் சிறப்பான வழிபாட்டில் உள்ளது. இக்கோயிற் திருச்சுற்றின் வடகிழக்கு மூலையில் தெற்கு நோக்கி வைக்கப்பட்டுள்ள ஜேஷ்டா சிற்பம் வழிபாடற்ற நிலையில் உள்ளது. இச்சிற்பம் பலகைக்கல்லில் வடிக்கப்பட்டுள்ளது. நடுவில் இரு கரங்களுடன் ஜேஷ்டா தேவி தனக்கே உரிய பாணியில் கால்களைப் பரப்பிய நிலையில் அமர்ந்து காணப்படுகிறாள். வலப்புறம் மாந்தன் மாட்டுத்தலையும் மனித உடலும் கொண்டு நின்ற நிலையில் இரு கரங்களுடன் காட்டப்பட்டுள்ளான். அவ்வாறே ஜேஷ்டாவின் இடப்புறம் மாந்தியின் அழகிய உருவம் இருகரங்களுடன் ஜேஷ்டாவின் அருகே பீடத்தில் எழிலாக அமர்ந்து காணப்படுகிறது. ஜேஷ்டையின் வலப்புறம் தலையருகே காக்கைக்கொடி காட்டப்பட்டுள்ளது. இடப்புறம் மாந்தனுடைய இடைக்குச் சற்று கீழே குள்ளமான ஆண் உருவம் காட்டப்பட்டுள்ளது. அவன் தலைமீது கூடை ஒன்றை ஏந்தியுள்ளான். அவன் அருகே ஜேஷ்டையின் வலக்கரம் டோல ஹஸ்தமாகக் காட்டப்பட்டுள்ளது. ஜேஷ்டா சிறிய கரண்ட மகுடம் தரித்து மேல் நெற்றியில் உருண்டையான தலைமாலை அணிந்து நீள்செவியில் மகர குண்டலங்கள், கைகளில் வளையல்கள் அணிந்து முழங்காலுக்குக் கீழ்வரையிலான இடையாடையுடன்

காட்டப்பட்டுள்ளாள். சிறிய தனங்களில் மார்புக்கச்சை காட்டப் படவில்லை. கீழ்வயிறு சற்று பெருத்துச் சரிந்த நிலையில் ஆனால் அழகுறக் காட்டப்பட்டுள்ளது. கால்கள் விரிந்தும், கரங்கள் டோல ஹஸ்தமாகவும் உள்ளன. மாந்தன், மாந்தி இருவரும் கரண்ட மகுடம் அணிந்துள்ளனர். இருவரது வலக்கரங்களும் கடக முத்திரை காட்டி தாழ் கரங்களாக உள்ளன.

இச்சிற்பத்தின் உருவ அமைதி, தோற்றம், முகப்பொலிவு, தலைக்கோலம், ஆடை அணிகளின் அமைப்பு, என இவை அனைத்தும் பிற்காலப் பல்லவர் காலச் சிற்ப வடிவென அறிவதற்குப் பெருந்துணை புரிகின்றன. இச்சிலை கி.பி. 8-9ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

சென்னை மாநகர்ப் பகுதியில மயிலை கபாலீசுவரர் கோயிற் குளக்கரையில் பல்லவர்கால ஜேஷ்டையின் உருவம் ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தற்போது கண்டறியப்பட்டுள்ள ஜேஷ்டையின் சிற்பம் மயிலைச் சிற்பத்தை விட அளவில் சிறியது. காலத்தாலும் முற்கூறிய சிற்பத்தைவிடப் பிற்பட்டது. சென்னை மாநகரில் இரண்டாவது ஜேஷ்டா சிற்பமாக கருதப்படும் இச்சிற்பம், இப்பகுதியில் இருந்துள்ள பழைய சிவன் கோயிலுக்கு உரிய பரிவார தேவதையாகவோ தனிக்கோயிலிலோ இருந்திருத்தல் வேண்டும்.

பல்லவர் காலத்தில் மிகச் சிறந்த வழிபாட்டுத் தெய்வமாக இருந்துள்ள ஜேஷ்டா தேவி, காலப்போக்கில் வழிபாடே இல்லாமல் கிடத்தப்பெற்றிருந்தாலும் கலை வரலாற்றுக்கு ஒரு மைல் கல்லாக இருந்து வழிபாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை எடுத்துக்கூறிக் கொண்டிருக்கிறது என்பது சிறப்பிற்குரியது.

# பொய்கையார் - புதிய பெயர்க்காரணம்

**எஸ். சௌந்தரபாண்டியன்**
காப்பாட்சியர்
அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம்
சென்னை

பொய்கையாழ்வாரும், களவழி பாடிய பொய்கையாரும் ஒருவரே என்பார் மு. இராகவையங்கார்; இருவரே என்பார் மறை மலையடிகள். களவழி பாடிய பொய்கையார் 'பொய்கை' எனும் ஊரினர் என்பது வேறொரு கருத்தாம்.

இக்கட்டுரை, அவ்வாராய்ச்சி எதிலும் சிக்குறாது, களவழி நாற்பது எனும் நூல் யாத்த பொய்கையார் என்பாருக்குப் 'பொய்கையார்' என்ற பெயர் ஏற்பட்டதன் காரணத்தை மட்டும் வேறொரு முகத்தான் ஆய்கிறது.

களவழி நாற்பதில், 'புனல் நாடன்' என்ற தொடர் இடம் பெறும் பாடல்கள் மொத்தம் பதினைந்து- பாடல் எண்கள்: 1, 2, 9, 10, 14, 16, 20, 25, 26, 27, 28, 31, 36, 37, 39.

'நீர் நாடன்' எனுஞ்சொற்றொடர் 8, 17, 19, 22, 32, 41 ஆகிய ஆகிய ஆறு பாக்களில் பயிலுகிறது.

பாக்கள் 7, 12, 24, 35 ஆகியவற்றில் 'காவிரி நாடன்' குறிப் பிடப் பெறுகிறான்.

'நீர்' எனப் பாடல் 30, லும், 'பொய்கை' என்று பாடல் 33-லும் 'கடல்' எனப்பாடல் 18-லும் வருகின்றன.

ஆக, இதுவரை கண்டாங்கு 28 பாக்களில் நீரைக் குறித்து ஆசிரியர் பாடியுள்ளமை தெளிவு.

மீதியுள்ள பாக்களில், குறிப்பால் நீரை உணர்த்தும் பாக்கள் கீழ்வருமாறு:.

| | | |
|---|---|---|
| நெய்த்தோர் புனல் | — | 23 |
| கணை மாரி | — | 40 |
| மங்குல் மழை | — | 11 |
| உரும் (இடி) | — | 6, 38 |
| மலை | — | 4, 13, 21 |
| சோலை | — | 29 |
| குடை | — | 15 |

இவ்வாறு பத்துப் பாக்களில் குறிப்பால் நீர் உணர்த்தப் படுகிறது.

இதுகாறும் மொத்தம் 38 பாக்கள் நீரை நமக்குக் காட்டி நிற்கின்றன.

இன்னும், பாடல் 5-ல், 'குருதி' என்ற சொல்லும், பா. 34-ல், 'உக்ககுடல்' (குடல் சிந்துதல்) என்ற தொடரும் வருவதை உளங்கொண்டு, நீர்க்குறிப்பு அவற்றிலும் உண்டு எனக் கொண்டால், களவழி நாற்பதில் 40 பாக்கள் நீரை நினைவு படுத்தி மிளிர்கின்றன என்றாகலாம்.

இங்ஙனம் தன் நூல் முழுவதும் நீரை இட்டுப் பாடிய அருந்திறனுக்காக, நூலாசிரியருக்கு, நீர் எனும் பொருளுணர்த்தும் 'பொய்கை' அடை தந்து, 'பொய்கையார்' என்று திறவோர் பெயரமைத்திருக்கலாமன்றோ?

# கூகையூர்

**ச. செல்வராசு**
தொல்பொருள் அலுவலர்

## சுவர்ணபுரீஸ்வரர் கோயில்

தென்னார்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தில் தெற்கே அமைந்துள்ளது கூகையூர். விருத்தாசலம் ஆத்தூர் நெடுஞ்சாலையில் 50 கி.மீ. தொலைவில் இறங்கி தெற்கே 7 கி.மீ. சென்றால் இவ்வூரை அடையலாம். சின்ன சேலத்தில் இருந்து கூகையூருக்கு பஸ் செல்கின்றது. குறைந்த அளவே பேருந்து வசதிகள் உள்ளன.

## ஊரும் பேரும்

கூகையூர் தென்னார்க்காடு மாவட்டத்தின் எல்லையில் அமைந்துள்ள ஊர். இவ்வூர் குகையூர் என்றும் கூகையூர் என்றும் குறிப்பிடப்படுகிறது. சோழர் கால கல்வெட்டுக்கள் 'மலாடாகிய ஜனநாத வளநாட்டு மகதை மண்டலத்து நாரையூர் கூற்றத்துக் கூகையூர்''[1] என்று குறிக்கின்றன. இக்கூகையூர் முன்பு வெள்ளாற்றின் இருகரைகளிலும் அமைந்திருந்தமையால் வடகரைக் கூகையூர் என்றும், தென்கரைக் கூகையூர் என்றும் இரு ஊர்களாக விளங்கின. தற்போது வெள்ளாற்றின் வடகரையில் உள்ள ஊரை மட்டும் கூகையூர் என்றும், தென்கரையில் உள்ள ஊரை பள்ளங்குளம் என்றும் வெவ்வேறு பெயர்களில் அழைக்கின்றனர். சோழ மண்டலத்திற்கும் தொண்டை மண்டலத்திற்கும் இடைப்பட்ட பகுதி, நடுநாடு என்றழைக்கப்பட்டது. அந்த நடு நாட்டின் மேற்குப் பகுதி மலையமான் குடியினரால் ஆளப்பட்டு வந்ததால் மலையமாநாடு என்று வழங்கப்பட்டது.

சங்க இலக்கியங்களில் கூகை என்ற குறுநில மன்னனொருவன் குறிப்பிடப்படுகிறான். அவன் பெயரில் கூகையூர் என்றும் திருநாவுக்கரசர் தம் சேத்திரக் கோவையில் கூகையூர் என்று பாடித் துதித்துள்ளதால் கூகையூர் என்றும், சித்த நாதேசுரர், குகை கட்டி

சிவயோகம் புரிந்து வந்ததால் குகையூர் என்றும் அழைக்கப் பட்டதாக பலபடக் கூறுகின்றனர். இவ்வூர் கல்வெட்டுகளில் கூகையூர் என்றே வழங்கியமை புலனாகிறது.

## கோயில் அமைப்பு

கோயில் கருவறை அர்த்த மண்டபம், மகா மண்டபம், முக மண்டபம் என்ற அமைப்புடன் கருவறையைச் சுற்றிலும் திருச்சுற்று மாளிகையும். அடுத்து நுழைவு வாயிலில் கோபுரமும் உள்ளன. வெளியில் ஓர் சிறிய மண்டபம், வடகிழக்கில் பெரிய நாயகி அம்மனுக்கு மூன்று அடுக்குகள் கொண்ட விமானத்துடன் கூடிய கருவறை, மற்றும் முகமண்டபம், ஆகியவற்றைக் கொண்டு திகழ்கின்றது. முகமண்டபத்தின் விதானம், சிற்பங்களால் அழகு செய்யப்பட்டுள்ளது. கொடுங்கையும் அதன் உட்பகுதிகளும் அழகிய வேலைப்பாட்டுடன் செய்யப்பட்டுள்ளது. சிற்பிகள் அச்சாரம் வாங்கும் பொழுது "பிச்சனூர் பெருமாள், கூகையூர் கொடுங்கை, வலசை நந்தி இவை மூன்றும் தவிர்க" என்று கூறி வாங்குவார் களாம். அத்தகு சிறப்பு வாய்ந்த இம்மண்டபம் சோழர்கால கலைப்பாணியில் கட்டப்பட்ட மண்டபம் ஆகும். பெரிய நாயகி அம்மன் கோயிலை ஒட்டி கல்யாண மண்டபம் உள்ளது.

## கல்வெட்டுகள்

இக்கோயிலில் சுமார் 22 கல்வெட்டுகள் உள்ளன. அவை சோழ, பாண்டிய, விஜயநகர காலத்தை சார்ந்தவை. கல்வெட்டுகள் மூலம் பல அரிய செய்திகளை அறிய முடியகின்றது. இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனை பொன் பரப்பின ஈஸ்வர முடைய நாயனார்[2] என்றும் இறைவியை பெரிய நாயகி அம்மன்[3] என்றும் குறிப்பிடுகின்றன. மேலும் இத்தகைய அழகிய இறைவன் இறைவியையும் பிரதிட்டை செய்து கற்றளியாக எழுப்பித்தவன் யார் என்பதையும் கல்வெட்டு நமக்கு தெறிவிக்கின்றது.

சோழர்களின் குறுநில மன்னர்களாக திகழ்ந்தவர்கள் மலைய மான்கள். இவர்கள் திருக்கோயிலுரை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்துள்ளனர். அவர்களில் ஒருவராகிய ராஜராஜ கோவல ராயன்[4] என்ற அரசன், இங்குள்ள பொன் பரப்பின ஈஸ்வர முடைய நாயனாரையும். இறைவி பெரிய நாயகி அம்மனையும்

பிரதிட்டை செய்து கற்றளியாக எழுப்பி உள்ளான்[5] என்பதை இக்கோயில் கருவறையின் வெளிச்சுவற்றில் தெற்கு பகுதியில் உள்ள கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. எனவே கோயில் எழுப்பப் பட்ட காலம் 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி ஆகும். ராஜராஜ கோவலராயனின் வேறு பெயர் கூகுடையான் ஈசானன் பொன் பரப்பினான். எனவே தன் பெயரால் இறைவனை பொன் பரப்பின ஈஸ்வரமுடைய நாயனார் என்று அழைத்தான்.

ஸ்ரீகைலாசமாகிய பொன் பரப்பின ஈஸ்வரமுடைய நாயனார் கோயிலை இந்த கிராமத்தில் கருவறை அர்த்த மண்டபம், ஸ்வப்ன மண்டபம், நிருத்த மண்டபம், முதல் பிரகாரம், கோபுரம், இரண்டாவது பிரகாரம், கோபுரம் ஆகியவற்றுடன் அமைத்து நிலங்களை இறையிலி அளித்து, கோயில் குருக்களுக்கு வசதிகள் செய்தும் தந்துள்ளான்.

## அளவு கோல் மாற்றம்

அடுத்து இங்கு காணப்படும் கல்வெட்டுகளில் குறிப்பிடத் தக்கது என்னவெனின் இம்மடிராயப்ப நாயக்க திம்மய்ய நாயக்கர் தானியங்களை அளக்கும் அளவையை நிர்ணயித்ததும்[6] அதே அளவையை மகதை மண்டலம் முழுமையும் பின்பற்றுதல் வேண்டும் என ஆணை பிறப்பித்தமையுமாகும்.

வாசுதேவ நாயக்கர் என்பவர் திருமலை நாயக்கர் காலத்தில் நிலஅளவு கோலின் நீளத்தை நிர்ணயித்து அதனை கல்வெட்டின் கீழேயே சுட்டிகாட்டி இந்த அளவுள்ள அளவுகோலைத்தான் மகதை மண்டல மக்கள் பயன்படுத்தி நஞ்சை, புஞ்சை நிலங் களை அளத்தல் வேண்டும்[7], முன்பிருந்த அளவுகோல் மிகவும் சிறியது. ஆகையால் ஏமாற்றவும் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லும் பொழுது மாற்றவும், செய்து விடுகின்றனர் என்பதால் கீழே குறிப்பிட்ட அளவு கோலைத் தான் எங்கும் பயன் படுத்த வேண்டும் என்பதே அவ்வாணையாகும். இதன் தற்போதைய அளவு சுமார் 7.00 மீட்டர் நீளம் ஆகும். இது போன்று அளவு கோல்கள் திருக்கோயிலூர் பகுதியில் பாறைகளில் வெட்டப் பட்டுள்ளதை காண முடிகிறது.

மேலும் இங்குள்ள கல்வெட்டுகள் பங்குனி மாதத் திருவிழா நடத்தவும், தேர்த்திருவிழா செய்யவும், கோயில் வருமானத்தில் கோயில் திருவிழா நடத்துவதுடன், கோயில் பழுதடைந்தால் அதனைப் பழுதுபார்க்கவும் செய்தல் வேண்டும் என்று குறிப்பிடுகின்றன.[8]

நிலங்களை தானமாகக் கொடுத்து பிராமணர்களுக்கும் கோயில் பணியாளர்களுக்கும் உணவு அளிக்க வசதி செய்துள்ளனர்.[9] மற்றும் பலவிதமான வரி விலக்குகளும் அளித்துள்ளனர். பசு தானமாக அளித்துள்ளனர். அரசர்கள் மட்டுமின்றி பொதுமக்களுக்கும் தானமளித்துள்ளதைப் பார்க்கும் பொழுது இவ்வூரின் செல்வச் செழிப்பை உணரமுடிகின்றது.

கோயிலுக்கு விளக்கு தானமாக அளித்த செய்தியும் காணப்படுகின்றது.[10] ஏரி, குளம் வெட்டியமையும் புலப்படுகின்றது. இவை மட்டுமின்றி வெம்பர் கூற்றத்தில் உள்ள நானாமுகராம சதுர்வேதி மங்கலம் என்கின்ற பெருநில கிராமத்தை தானமாக அளித்த செய்தி காணப்படுகின்றது. இக்கிராமம் 26 பங்குகளைக் கொண்டது. ஒருவருக்கு 1 பங்கு வீதம் 24 பங்குகள் 24 பிராமணர்களுக்கும் ஒரு பங்கு யஜுர் வேத விருத்திக்கும், அடுத்து ஒரு பங்கு புராண விருத்திக்கும் மகதை மண்டலத்து மலாடாகிய ஜனநாத வளநாட்டின் தெற்குக் கரையில் உள்ள வேட்டைக்குடி சம்புவராயன் என்கின்ற சோழப்பிள்ளை அளித்துள்ளார். இந்த ஆணையில் குலசேகர விழுப்பரையன் ஒப்பம் இட்டு முடித்துள்ளான்.

எனவே வேதங்களுக்கு ஒதுக்கீடு செய்து வந்ததையும், நில அளவை, தானிய அளவை, கோயில் எடுப்பித்த செய்தி ஆகிய அனைத்து செய்திகளையும் அறிய கல்வெட்டு உதவுகிறது.

## பெரியநாயகி அம்மன்

சுவர்ணபுரீசுவரர் கோயிலின் வடகிழக்கே அமைந்துள்ளது பெரியநாயகி அம்மன் கோயில். இதன் விமானம் மூன்று அடுக்குகளை கொண்டு திராவிட கலைப்பாணியில் கட்டப்பட்டு சுதை உருவங்கள் நிறைந்து அழகிய வடிவில் காணப்படுகின்றது.

முன்மண்டபம் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடியது, விதானத்தில் புடைப்புச் சிற்பங்களாக அறைஅறையாக பிரித்து செதுக்கப்பட்டுள்ளன. கொடுங்கையின் அழகு மிகவும் பாராட்டிற் குரியது. கொடுங்கையின் வெளிப்புறத்தில் உடும்பு, சந்திர சூரியன் பிறைகள் ஆகியவை காட்டப்பட்டுள்ளன.

இதே இடத்தில் மண்டபத்தின் மூன்று பக்கமும் இறைவனின் திருமணக் காட்சி, போர் புரிதல் மற்றும் இறைவனின் பிற உருவங்கள் செதுக்கப்பட்டுள்ள காட்சி, மிகவும் சிறப்பாக உள்ளது.

## நிருத்த மண்டபம்

நிருத்த மண்டபம் என்று கல்வெட்டு குறிப்பிடுகின்ற இம்மண்டபம் தற்பொழுது திருமண மண்டபமாக பயன்பட்டு வருகின்றது. இம்மண்டபம் அழகிய உருண்டையான தூண் களை கொண்டுள்ளது. கட்டிட கலை அமைப்பில் சோழர் காலத்தை சேர்ந்தது என்பதை அறிய முடிகிறது. இதனை கட்டியவர் பற்றிய குறிப்பும் கல்வெட்டில் வருவதால் இதன் காலம் 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பதில் ஐய மில்லை. பின்னர் விஜயநகர காலத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதையும் காணமுடிகின்றது.

இக்கோயில் இரண்டு பிரகாரங்களையும் ஒரு கோபுரத்தையும் கொண்டு திகழ்கிறது. இரண்டாவது நுழைவில் கோபுரம் காணப் படவில்லை. இரண்டாவது பிரகாரத்தின் நுழைவில் கோபுரம் உள்ளது. இவையும் விஜயநகர காலத்தில் புதுப்பிக்கப்பட்டு இருக்கக்கூடும்.

## ஆலயமணி

இவ்வாலயத்தின் நுழைவில் கோபுரத்தின் தெற்கே மணி ஒன்று தொங்கவிடப்பட்டுள்ளது. அந்த மணியில் கீழ்க்கண்ட வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

"அம்பிகை துணை

பெரியநாயகி அம்மன் கூகையூர் தேவஸ்தானம்

1916 ஆகஸ்ட் மாதம் 10ந் தேதி"
என்று பொறிக்கப்பட்டுள்ளது. சுமார் 2 அடி உயரம் உள்ளது.

### சிற்பங்கள்

இங்கு கற்சிற்பங்களும், செப்புத் திருமேனிகளும், மரச் சிற்பங்களும் அதிக அளவு காணப்படுகின்றன. அவற்றில் கற் சிற்பங்கள் தேவகோட்டத்திலும் திருச்சுற்று மாளிகையிலும் வைக்கப்பட்டுள்ளன. இவை முறையே சூரியன், சந்திரன், நாயன்மார்கள் விநாயகர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வாணை, அம்மன் சண்டீசர், பைரவர் என பெரிய அளவில் சிற்பங்கள் திருவாட்சையுடன் செதுக்கப்பட்டு சிறப்புடன் திகழ்கின்றன.

### செப்புத் திருமேனிகள்

இக்கோயிலில் விநாயகர் சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், அம்மன், தனி அம்மன், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வானை, பிரதோச நாயகர், சண்டிகேஸ்வரர், நடராஜர், சிவகாமி, ஆலம் பாவைவிளக்கு போன்றவைகளுடன் நால்வர் திருமேனிகளும் காணப்படுகின்றன. இந்நால்வர் செப்புத் திருமேனிகளிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சம்பந்தர், அப்பர், மாணிக்கவாசகர், சுந்தரமூர்த்தி, பரவை நாச்சியார் என்று எழுதப் பட்டுள்ளன. இவற்றில் சில திருமேனிகளைத் தவிர மற்றவை அனைத்தும் சுமார் 150 வருடங்களுக்கு முற்பட்டவை ஆகும்.

### திருவுருவச் சிற்பம்

கூகையூரில் திருவுருவச் சிற்பம் ஒன்று தனித்து நின்ற நிலையில் இருகைகளை கூப்பியவாறு காணப்படுகின்றது. ஓங்கிய கொண்டையும், முறுக்கிய மீசையும், அழகிய அரைவட்ட தாடியும், அவரது கம்பீரமான தோற்றத்தை உணர்த்துகின்றது. இடையில் குறுவாளும், பாதம் வரை தாங்கிய ஆடையும் கை, கழுத்து கால்களில் ஆபரணங்கள் ஆகியவற்றுடன் காணப்படும் இச்சிற்பம் ஒரு சோழர் கால மன்னனின் திருவுருவம் போல காணப்படுகின்றது. இவ்வூரில் காணப்படும் கோயில் கல்வெட்டுகள் குலோத்துங்க

சோழனின் காலத்தில் மலையமான் மன்னன் ராஜராஜகோவல ராயன் எழுப்பியுள்ளதை குறிப்பிடுகின்றது. எனவே இத்திரு வுருவம் குலோத்துங்க சோழன் அல்லது ராஜராஜ கோவலராஜனாக இருக்கக்கூடும். பெரும்பாலும் இச்சிற்பம் குலோத்துங்க சோழனாக இருக்ககூடும் என்ற கருத்திற்கே இடமளிக்கின்றது.

## அய்யனார்

அடுத்து காணப்படும் சிற்பங்களில் அய்யனார் சிற்பம் மிகவும் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் திறந்த வெளியில் கோயிலில் இருந்து சற்று வெளியே தனியாக காணப் படுகிறது. பூரணி, புற்கலா தேவியுடன் அய்யனார் சிற்பம் அமர்ந்து ஒரு காலை தொங்கவிட்ட நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் புடைப்புச் சிற்பமாக செய்யப்பட்டுள்ளது. இதன் சிற்ப அமைதியையும், அணிகலன்களையும் பிறவற்றையும் ஒப்பு நோக்கும் போது, இச்சிற்பம் காலத்தால் 12 - 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கக்கூடும் என்று கருதப்படுகின்றது-

## முடிவு

இக்கோயில் மலையமான்கள் வம்சத்தில் வந்த மன்னன் ராச ராச கோவலராயன் என்கின்ற கூகுடையான் ஈசானன் பொன் பரப்பினான் என்பவரால் கட்டப்பட்டது. எனவே இது மலைய மான்களால் எடுக்கப்பட்ட கற்றளி என்பது தனிச் சிறப்பு ஆகும். அத்துடன் மலையமான்களின் கட்டடக் கலைப்பாணிக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## அடிக்குறிப்புகள்

1. A.R.E. 1918/93
2. A.R.E. 1918/93
3. A.R.E. 1918/93 to 124

4, 5, 6, 7, 8, 9 - 1918/93 to 124

10. கூகையூர் தலவரலாறு

# THE ICONOGRAPHY OF NAVAGRAHAS IN HINDU-MYTHOLOGY

**M. CHANDRAMOORTHY** M.A.,
Registering Officer, Chennai.

Suryan (Sun), Chandran (Moon), Angarakan (Mars), Budhan (Mercury), Guru (Jupiter), Sukran (Venus), Sani (Saturn). Rahu and Kedhu (shadow planets) are together known as navagrahas (nine planets). The word 'graha' means 'to catch'. Since these planets hold the living beings on the planet earth in their powerful grip they are known as grahas. All over the world, the days of the week are named after the grahas, i.e., Sunday after the Sun, Monday after the Moon, Tuesday after Mars, Wednesday after Mercury, Thursday after Jupiter, Friday after Venus and Saturday after Saturn.

Navagrahas have a very special place in the Hindu mythology. They are worshipped as gods and are widely believed to play a key role in the destiny of human beings. In astrology, their movements, positions and relative influences are all considered to be of great importance in the day-today life of mankind, be it education, career, choice of the marriage partner, accumulation of wealth, buying/selling of property and so on. One can boldly say that no sphere of human activity can escape the influence of the planets, according to the Indian belief system.

Historically speaking, the worship of navagrahas in Tamilnadu is of a very ancient origin. The ancient Tamils worshipped the Sun, the Moon, and the rest of the planets in their proper order of importance. Since 2nd century B.C., several references are found about the planets in

Tamil literature and Devaram, a main collection of Saivite devotional songs. Archaeological evidences have revealed the prevalence of statues of the grahas in the temple complexes of Tamilnadu as early as during the early Pandya period, i.e., 8th century A.D. In Tamilnadu, there are special temples for the navagrahas, which are mentioned in individual detail.

Generally, the platform for the navagrahas is situated in the north-east direction of the temple complex. Generally they are found in Siva temples. In some temples they are installed along with their consorts and vehicles. In Thiruvarur and Vaitheeswaran temple, they are found installed in a single row. In the temple of Thanjavur, they are in linga (phalus) shape.

## Suryan (The Sun God)

The Sun is the life-giver of the planet earth He is considered to be the soul of the world. He is the chief of all the planets, the most important one. The navagrahas are set up on a high square pedestal with Sun as the centre. In the natural state also, the sun is the centre of the planetary system. Though scientifically it is known to be a star, in Hinduism, it is considered one among the planets. It is also known by other names such as: Ravi, Gnayiru, Adithan, Udayan, Paridhi, Pagalavan, Kadiravan, Adhavan, etc.

Sun is mentioned in Rg Veda as one of the three types of Agni (fire). The method of calculating Nazhi (time) with the aid of the Sun is known as surya siddantham. Legends state that the Sun came from the sound 'om'. He is said to be the quality of the three murthys of Hinduism. He is the ruler of Kalinga land and belongs to Kasyapa Gothra. The epic Mahabharatha states that he

was born as the son of Kasyapa rishi and Athithi He is said to have married Sanjigai and begotten several offspring through her. As she could not withstand the heat of the Sun, she changed her shadow into a female form and sent that to Surya. This female was called Chayadevi and she also begot many progeny for the Sun. He is said to have other consorts named Usha and Prathyusha. Brihu, Valmiki, Agasthyar, Vasishtar, Sukrivan, etc. are said to be his sons. He is said to have taught the navavyagarna to Hanuman.

In installation in the temples, the Sun is placed in the centre, with other grahas around it in the following order: East — Chandran, South — Vyazhan, West — Budhan, North — Sukiran, Southeast — Angarakan, Southwest — Sani, Northwest — Rahu and Northeast — Kedhu.

It is normally depicted in seated or standing posture, with two or four arms. It is found on a lotus pedestal, holding full-blown lotus flowers in the hands. The figure is shown as a handsome male, according to the Silpa Sastras (rules governing the Art of Sculpture). The colour of the god is bright red. His garment is also red in colour and he wears sandal paste. His gem is Manickam (ruby) the red stone; grain is wheat, flower is red lotus.

The vehicle of the Sun God is a chariot with a single wheel, drawn by seven horses known as the Saptha, driven by Arunan, his charioteer. The names of the seven horses are : Gayathri, Tiruttupu, Jagathi, Anuttapu, Pandhi, Pragathi, and Muttinuku.

**Chandran (The Moon God)**

Said to be the second planet, it also known by other names such as Soman, Lokapriyan, Mouli, Sashi and Thingal. He is mentioned in Rg Veda and the epics.

Legends mention that he decorates the headgear of Lord Siva. He cooled the heat generated while the Devas churned the ocean of milk for nectar. He is the patron graha of poets, artists, painters etc. He is head of the kingdom of Yamuna. He is one of the parivara gods of Siva temples. He is said to support the growth of plants. He is said to belong to Athiri Gothra.

He is normally depicted in seated or standing posture, with two or four arms. When shown with four arms, the upper two arms hold lily flowers and the lower arms are shown in abhaya hastha posture (blessing) and uru (placed on the thigh) hastham. Around the head halo or prabha is depicted mandala. His colour is white and he wears soft white garments, white flowersand pearls. A crown is adorned on the head and the other ornaments worn are - a golden *yagnopavita* (sacred thread) on the chest, a udara-bandha (belt) on the upper abdomen etc.

His vahana (vehicle) is the lion and Vimana. He has a lion banner. His gem is the pearl, grain is paddy and flower is kumudam (white water lily).

His consorts are, Kanti and Sobha. According to Purva Karnagama, he is husband of stars, the main consort being Rohini.

**Angarakan (Mars)**

This is third planet of the navagrahas. Considered to be the son of Bhumi Devi (mother earth), he is also known as Sevvai and Kuja.

Legends :

He is normally depicted in a standing posture with two or four arms. He faces south. His colour is fire red. He wears red flower garland and also red colour garments. His ornaments

are Kirita makuta (conical-shaped crown), makara-kundala (fish-shaped ear-rings), kanda saram, manivada (neck ornaments), keyura, kappu (bracelet), etc. In the upper hands, he is shown bearing the sakthi weapon and trisul (trident) while the lower hands are held in abhaya hastha pose. Sometimes, he also bears a trident with a serpent coiled around and also a damaru (Kettle -drum). The left lower hand is shown to be placed on a gadhayuda (mace).

His vehicles are the annam (swan) and the seval (cock). His gem is coral; his grain is thuvarai (lentil) and flower is Senbagam.

**Budhan (Mercury)**

The fourth planet of the group, Budhan is seated facing east. He is considered to be the son of Chandran and Tha rai. Due to this he is installed next to the Sun. His other names are Vidhyakaragan, Buddhidada, Manoharan and Grahapathy.

He is said to be the ruler of Magadha land and belong to Athri Gothra. Worshipping Budhan is said to increase the powers of the mind; skills can be mastered easily. He is ā graha who bestows good things. He can cure the diseases of the nervous system. He is skilled in the art of logical arguement and in business.

Normally depicted in a seated or standing posture, he has either two or four arms. The right hand is shown in varada hasta, while the other three bear khetaka (shield), khadga (sword) and gadhayudam (mace). He is turmeric yellow in colour. His garment is of yellow colour, reaching below his knees. The ornaments worn by Budhan are kirita makuta (crown), makara kundalam (fish-shaped ear-ring) Kanda-saram, pushpa-padakkam, udara-bandha (belt) channa

vira (string across the chest), etc. He wears Maragadam (emerald) as it is his gem. His grain is pachaipayaru (green gram); his flower is ven kanthal.

His vehicle is a chariot fitted with a lion or horse, and his yellow flag is with the lion/elephant emblem. The name of his consort is Gnanadevi.

## Viyazhan (Jupiter)

This is the fifth planet. His other names are Guru, Devaguru and Brahaspathy. He is mentioned in the Rg Veda as Brahaspathi. He is the one with wisdom and knowledge who has studied the vedas and the arts; he is the leader of the Devas

He is said to be the ruler of Sindhu land and belong to Angirasa Gothra. He is said to have been born to Angirasa rishi and Siratha devi. His consorts are Tharai Sangini. His son is Kachan. He sent Kachan to Sukran to learn the 'Amirtasanjeevini mantra' from him. Yama is also said to be his other son. He performed severe penance in Kasi and attained the position of being the master of the Devas. Hence he is known as Devaguru.

Normally depicted in seated or standing posture, he is shown with two or four arms. The left hand is shown in varada (bestowing) hasta, with the other three hands holding kamandala (water container), akshamala (string of sacred beads) and thandu (arm-rest). Sometimes he is shown as holding a book also. He is golden yellow in colour and wears garments of the same colour. His ornaments are Kirita makuta, (conical-shaped crown), makara-kundalam, (fish-shaped ear rings) pushpa padakkam, manivadam, udara bandha, keyura and kappu (bracelet).

Elephant or Swan is his vehicles. His chariot has four wheel and eight horses. He is said to go around the Mount Meru. His gem is Pushparagam (topaz); flower is mullai (jasmim), grain is Kadalai (gram). His supreme god is Brahma and the secondary god is Indra.

**Sukra (Venus)**

The people of India have known this planet since very ancient times. His other names are Velli, Venan.

He is considered to be the son of Brihu Muni and Pulomasai. He belongs to Bhargava Gothra. He is the king of Bojagada kingdom. He is said to have performed penance and obtained the Amruta sanjeevani mantra from Siva. He is the Guru of the Asuras. Due to his mantra, the Asuras came back to life after death. As the Devas complained to Siva about this, he swallowed him; later he came out of the body of Siva through... hence the name Sukra. Any changes in his position in the sky are said to indicate famine in the country.

He is installed facing east, either in seated or standing position. He is shown with two or four arms, the upper two holding akshamala and kamandala; the lower right resting on the gadhayuda (mace) and left in varada (bestowing) hasta pose. Sometimes he is shown holding nidhi (treasure) and (pustaka) book. His colour is white and he wears white garments. His ornaments are Kirita makuta (conical-shaped crown), Makara-kundala (fish-shaped ear-rings), yajnopavita (sacred thread across the chest), etc.

Garuda (eagle) and horse are his vehicles His gem is diamond; his grain is mochai (bean), flower is white lotus.

**Sani (Saturn)**

This is a well-known planet, mentioned in ancient texts. His other names are Ayulkarakan, Mandhan, Jadadharan.

According to legends he is the second son of Surya and Chayadevi. His son is Kuligan. It is believed that by worshipping Sani, one can obtain longevity. His Adidevata is Yama, the God of Death. He is said to belong to Kasyapa Gothra. He is the king of Sowrashtra kingdom. His characteristic is said to be 'Tamasa'.

Generally shown standing, with the crow behind him, and while shown seated, he is seated on the crow with the left leg folded upright and the right hanging down freely He is of small stāture, shown somewhat lame in one leg. He is shown facing west. He is black in colour. Normally he is shown with two or four hands, with the upper right hand holding the pasa (noose), upper left, bow and arrow, lower right in abhaya hasta pose (blessing) and the left in uru hasta. (placed on the thigh). According to Amsumath Vedahama, he is said to be holding an elephant's tusk in the right hand with the left in varada pose. It also prescribes lotus pedestal for him. He wears black colored garments. His ornaments are Kirita makuta (conical-shaped crown), Makara-kundala (fish-shaped ear-rings) yajnopavita (sacred thread across the chest), etc

His vehicle is the crow. The Visnu Darmothra states that his vehicle is an iron chariot with eight horses.

His gem is Indrablue (saphaire) stone. His flower is karunguvalai (water hiacynth). His grain is gingelly seed (til). His three consorts are Neela, Mantha and Jyeshta.

## Rahu (a shadow planet - Dragon's head)

He is shown situated in the southwest direction, facing south. His other names are Suvarbhanu, Damograham and Sambut. He is known as the shadow planet in that he is not visible. In Tamil he is known as Karungol (black planet).

He belongs to Pateenasi Gothra and is ruler of the kingdom of Parpara. His superior goddess is Durga and second god is Yama or snake. He is said to relieve people from the effects of poisonous bites.

Even those who do not have much knowledge of astrology have a firm faith in this planet and his effects. The worst effects of this planet are considered to create problems, grief and damage, similar to the darkest night. He is mentioned in the Rg Veda as an Asura named Suvarbhanu, who hid the Sun with darkness. This is known as the eclipse. The puranas state that an Asura named Suvarbhanu, hid among the Devas and received the nectar of immortality, and when discovered, his head was cut off. Thus only the head attained immortality and remained without the body.

Shown in a standing posture, with both hands in anjali hasta (worshipping posture). A five-hooded serpent stands behind him. His hoods spread over his head, and the tail curving behind him. According to Silpa Sastra (rules of the Art of Sculpture) he is said to have four arms, one in varada hasta, and the other three bearing sword, shield and trident. He is black in colour, darkness personified.

His vahana is Lion/Goat.

His gem is Komedagam (zircon); grain, black gram; his flower is mandarai; flag is black in colour.

His consort is Simhee and son Kadigan.

**Kedhu (a shadow planet - Dragon's Tail)**

In ancient times, the name kedhu meant all kinds of celestial bodies including comets, meteors, etc. These were mentioned in plural Here, however, we are concerned about

the graha or planet Kedhu. The astrologers consider him as the Mokshakaraha. He is situated in the northwest, facing south. His other names are Sigi, Dhuman, Mrthyu, Puthran, Analan - he is the god of descending node. Kedhu's adi devata (superior god) is Chitraguptan, the assistant or account-keeper of Yama the god of Death. He belongs to Saimini Gothra and is the ruler of the central kingdom.

According to legends, these two shadow planets were once asuras (demons) who along with devas (gods), churned the ocean of milk in order to get amrita (life-giving nectar). While devas were scheming to cheat the asuras of getting hold of the nectar, these two asuras hid among devas and drank the nectar. On being preceived, Lord Visnu became enraged and cut off their heads with his chakrayuda (disc weapon). They had yet to swallow the nectar; thus their heads alone which had received the nectar had gained immortality, while their bodies were doomed to decay. Thus it was that these two planets came about, say the legends.

Kedhu is normally depicted in standing posture with the right hand resting on the gadhayuda (mace) and the left in varada hasta pose (bestowing). The upper portion of his body is in human form, while the lower half is that of snake form. In this form, both his hands are held together in anjali hasta (worshipping) pose. This is generally seen in the south Indian sculptures. His colour is that of smoke. He wears yellow garment and flowers of many colours adorn him. His flag is of many colours.

His vahana is Garuda or Lion. He also rides in a chariot drawn by doves.

His gem is vaiduryam (cat's eye) and grain is horsegram. His flower is red oleander.

Kedhu's consort is known as Chitralekha.

T. A. Gopinatha Rao - Elements of Hindu Iconography, Vol. I Part II Reprint, (1997)
Ki. Va. Jaganathan - Navagrahangal (Tamil), Alliance Publications. Chennai
Najan - Navagraha Nayakargal, Prathibha Publications.

## எல்லைக் கல்லில் இறைவன் பெயர்

கோயில்களுக்கு நிலக்கொடை அளிக்கும் பொழுது எல்லை தெரித்துக் கல்லும் கள்ளியும் நாட்டுவதோடு சிவன் கோயிலாயின் சூலக்கல்லும், பெருமாள் கோயிலாயின் திருவாழிக்கல்லும் நாட்டுதல் மரபு. ஆனால் அக்கல்லில் இறைவன் பெயரும் பொறிக்கப்படும் என்பதற்கு தென்னார்க்காடு மாவட்டம் திட்டக்குடி வட்டம் ஆதனூரில் உள்ள எல்லைக்கல் எடுத்துக் காட்டாக உள்ளது.

திட்டக்குடிக்குத் தென் மேற்கில் வெள்ளாற்றின் தென்கரையில் உள்ளது ஆடுதுறை. இவ்வூர் இறைவன் ஆடுதுறை உடையார் என்றும் குற்றம் பொறுத்த நாயனார் என்றும் பெயர் பெற்றவர். இவ்விறைவனுக்கு கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் ஆதனூரில் நிலக்கொடை அளிக்கப்பட்டுள்ளது. அதனை அடையாளங்காட்டும் சூலக்கல்லிலும் மற்றொரு எல்லைக் கல்லிலும் இறைவன் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது சிறப்பானது.

| 1. சூலக்கல் | 2. தனி எல்லைக் கல் |
|---|---|
| 1. ஆடுதுறை | 1. குற்றம் பெ |
| 2. குற்றம் பொ | 2. ா றுத்தவர் |
| 3. பொறுத்தவர் | 3. ஆடுதுறை |

இக்கற்கள் இரண்டும் ஆதனூருக்கு வடகிழக்கில் செல்லியம்மன் கோயில் வழியில் ஒரு கி.மீ. தொலைவில் நடப்பட்டுள்ளன. — க. குழந்தைவேலன்

# சோழர் வரலாற்றில் புதிய ஒளி

**டாக்டர் ஆ. பத்மாவதி**
**கல்வெட்டாய்வாளர், சென்னை**

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டத்திலுள்ள மாதனூர் என்ற ஊரின் மலையடிவாரத்தில் புதிதாக நான்கு நடுகற் கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன. அக்கல்வெட்டுகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், சிற்ப அமைதியில் சிறந்ததாகவும் விளங்குகின்றன.

**நடுகல் 1**

கோப்பரகேசரிவர்மரான உடையார் விசைய ராஜேந்திர தேவரின் ஒன்பதாவது ஆட்சியாண்டைச் சேர்ந்நது இந்நடுகல். விசைய ராஜேந்திரன் என்பது முதலாம் இராஜாதிராஜனின் விருதுப்பெயராகும். சோழர்களின் அரியணைப் பெயர்களாகிய ராஜகேசரி, பரகேசரி என்பதில் ராஜகேசரி என்ற பெயரைப் பெற்றவன் அவன். ஆனால் இக்கல்வெட்டோ பரகேசரி விசைய ராசேந்திர தேவர் எனக் குறிப்பிடுகிறது.

கல்யாணபுரத்தை வென்று விசைய ராஜேந்திரன் என்ற பெயரை முதலாம் இராஜாதிராஜன் பெற்றது, அவனது 34-வது ஆட்சியாண்டில்தான். ஒன்பதாவது ஆட்சியாண்டில் அல்ல. ஆனால் இக்கல்வெட்டு ஒன்பதாம் ஆட்சியாண்டிலேயே விசைய ராஜேந்திரன் என்ற பெயரைக் குறிப்பிடுவது இங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

முதலாம் இராஜாதிராஜன் தனது 36-வது ஆட்சியாண்டில் நடந்த கொப்பத்துப் போரில் இறந்துவிடவே, இளவரசனாக கி.பி. 1052-ல் முடிசூட்டப்பட்ட அவனது தம்பி இரண்டாம் இராஜேந்திரன், தன் தமையனின் இறப்பால் சோர்வுற்ற வீரர்களுக்குத் தைரியமூட்டி தலைமை தாங்கி போரிட்டு சாளுக்கியன் செயசிம்மனைக் கொன்று வெற்றி வாகை சூடினான்.

மேலும் போர்க்களத்திலேயே அரசனாக முடிசூட்டிக்கொண்டான். தொடர்ந்து கொல்லாபுரத்தில் வெற்றித்தூண் ஒன்றையும் நாட்டினான்.

சோழர் வரலாறு (The Colas p. 257) எழுதிய திரு. நீலகண்ட சாஸ்திரி அவர்கள், பெட்டதிம்ம சமுத்திரம் என்ற ஊரிலுள்ள கல்வெட்டுப் பற்றிக் குறிப்பிடுகின்றார். சக வருடம் 971-ஐச் சேர்ந்த அக்கல்வெட்டில் பரகேசரிவர்மன் விசைய ராஜேந்திர தேவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளதையும், சக வருடம் 981 என்பது கி.பி. 1057-58-க்குச் சமமானது ஆகையால் அக்காலத்தில் முதலாம் இராஜாதிராஜன் ஆட்சியில் இல்லை என்பதையும் குறிப்பிட்டுள்ளார். அவன் 36 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி புரிந்ததாகத் தெரியவில்லை என்று கூறி இக்கல்வெட்டு இரண்டாம் இராஜேந்திரனின் தனித்தன்மை வாய்ந்த கல்வெட்டு என்றும் கூறியுள்ளார். அதுமட்டுமல்ல திருவொற்றியூரிலுள்ள விசைய இராஜேந்திரனின் கல்வெட்டும் இரண்டாம் இராஜேந்திரனின் கல்வெட்டாகவே இருத்தல் வேண்டும் என்கிறார்.

இந்த பின்னணியில் மாதனூரில் படி எடுத்து வரப்பட்ட கல்வெட்டு முக்கியத்துவம் பெறுகிறது. இக்கல்வெட்டும் பெட்ட திம்ம சமுத்திரம் கல்வெட்டைப் போல பரகேசரிவர்மன் விஜைய ராஜேந்திர தேவரைக் குறிப்பிடுகிறது. ஆட்சியாண்டு ஒன்பது என்பதால் இக்கல்வெட்டு இரண்டாம் இராஜேந்திர சோழனின் கல்வெட்டாகும். மேலும் இந்நடுகல்லில் இறந்துபட்ட வீரன் சித்திரமேழி பெரியநாடு என்ற வணிகக்குழுவைச் சேர்ந்தவன். இக்குழுவினர் கல்வெட்டில் 'உத்தம நிதி' என்ற தொடர் சிறப்பித்துக் கூறப்படுவதுபோல இந்நடுகல்லிலும் 'உத்தமநிதி அபையம்' எனக் கூறப்பட்டுள்ளது. சித்திரமேழி பெரிய நாட்டார் என்ற வணிகக் குழுவினரின் கல்வெட்டுகள் இரண்டாம் ராசேந்திர சோழன் ஆட்சி காலம் முதல்தான் காணப்படுகின்றன. நடுகல்லின் எழுத்தமைதியும் இம்மன்னன் காலத்திற்கே சான்றளிக்கின்றது.

தமையன் முதலாம் இராஜாதிராஜன் மேலைச்சாளுக்கிய நகரான கல்யாண புரத்தை எறிந்து வெற்றிவாகைச் சூடி விஜையாபிஷேகம் செய்து கொண்டு விஜைய ராஜேந்திரன்

என்ற சிறப்புப் பெயர் பெற்றது போல, பட்டத்து இளவரசனாகிய இரண்டாம் ராஜேந்திரன், கொப்பத்துப் போரில் தன் தமையன் இறந்தவுடன் தலைமையேற்று போர் நடத்தி வெற்றி வாகைச் சூடி போர்க் களத்திலேயே அரசனாக முடி சூட்டி கொண்ட போது தானும் விஜைய ராஜேந்திரன் என்ற சிறப்பு பெயரைப் பெற்றிருத்தல் வேண்டும்.

எனவே பெட்டதிம்ம சமுத்திரம் கல்வெட்டினை அடுத்தும், சாஸ்திரி அவர்களின் ஊகம் சரியானது என்பதை நிலைநாட்டுவது போலவும் மாதனூர் நடுகல் கிடைத்திருப்பது மிகவும் சிறப்பானதாகும்.

## உருவ அமைதி

இந்நடுகல் கல்வெட்டு உருவ அமைதியிலும் சிறப்பிடத்தைப் பெறுகிறது. இறந்த வீரனின் கால்களுக்கருகில் இரு பசுக்கள் உள்ளன. பசுக்களின் சிற்பங்கள் மிகவும் நேர்த்தியாக செதுக்கப் பட்டுள்ளன. வீரன் தனது இடது காலின் கீழே ஒரு மனிதனை மிதித்தவாறு நின்று கொண்டிருக்கின்றான். காலடியில் கிடக்கும் மனிதனோ, ஆடவல்லானாகிய நடராசரின் காலின் கீழே கிடக்கும் முயலகன் தலையைத் திருப்பிப் பார்ப்பது போல பார்க்கின்றான்.

இடக்கையில் வில்லையும் வலக்கையில் குத்தீட்டியையும் கொண்டுள்ள இவ்வீரன் இடுப்பின் வலப்புறம் கத்தியைச் செருகியுள்ளான். இடுப்பாடையும் முண்டாசும் குஞ்சத்துடன் விளங்குகிறது.

**இக்கல்வெட்டு** ஆவணம் இதழ் எண் 12 பக்கம் 22-ல் வெளியாகியுள்ளது.

---

பி.கு. மாதனூர் நடுகற்கள் இக்கட்டுரையாசிரியர் ஆ. பத்மாவதி, கல்வெட்டாய்வாளரால் 1998-ம் வருடம் பிப்ரவரி மாதம் முகாம் மேற்கொண்டு படி எடுத்து வரப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

## அலுவலக நடவடிக்கைக் குறிப்புகள் - I

**3.5.2002 அன்று சென்னை ஆணையர் அனுவலகத்தில் நடைபெற்ற தொல்லியல் துறையின் கல்வெட்டுப்பிரிவு, அகழாய்வுப் பிரிவு, வரலாற்றுக்கு முந்தையகால அகழாய்வுப் பிரிவுப் பணிகள் குறித்து நடைபெற்ற கூட்டத்தின் நடவடிக்கைகள்**

முன்னிலை : ஆணையர் **முனைவர் ரா. கண்ணன், இ.ஆ.ப.,**

ந.க.எண். ஆ5/2623/02 நாள் : 13.5.2002

கூட்டம் தொல்லியல் (ம) அருங்காட்சியக ஆணையர் முனைவர் ரா. கண்ணன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பங்கு பெற்றோர் விவரம் :

1. **திரு. மா. சந்திரமூர்த்தி**, பதிவு அலுவலர், சென்னை
2. **திரு. கி. ஸ்ரீதரன்**, உதவிகல்வெட்டுக் கண்காணிப்பாளர், சென்னை
3. **திரு. க. குழந்தைவேலன்**, கல்வெட்டாய்வாளர், சென்னை
4. **திரு. சு. இராசகோபால்**, கல்வெட்டாய்வாளர், சென்னை
5. **திருமதி. ஆ. பத்மாவதி**, கல்வெட்டாய்வாளர், சென்னை
6. **திருமதி. அர. வசந்தகல்யாணி**, கல்வெட்டாய்வாளர் சென்னை
7. **திரு. வெ. வேதாசலம்**, கல்வெட்டாய்வாளர், மதுரை
8. **திரு. இரா. ப. கருணானந்தம்**, கல்வெட்டாய்வாளர், ஊட்டி
9. **திரு. கோ. முத்துசாமி**, கல்வெட்டாய்வாளர், மயிலாடுதுறை

10. **திரு. கோ. அர்ச்சுனன்**, கல்வெட்டாய்வாளர், சென்னை

11. **திரு. ஜெயராமன்**, இளநிலைக் கல்வெட்டாய்வாளர், தஞ்சை

12. **திரு. மே. சீனிவாசன்**, இளநிலைக்கல்வெட்டாய்வாளர், சென்னை

13. **திரு. க. ஈஸ்வரன்**, கல்வெட்டு படிப்பவர்

14. **திரு. பூபாலன்**, கல்வெட்டு படியெடுப்பவர்

மேலும்

1. **திருமதி. சீ. வசந்தி**, அகழாய்வாளர், சென்னை
2. **திரு. வெ. இராமமூர்த்தி**, வரலாற்றுக்கு முந்தையகால அகழாய்வாளர், சென்னை

கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகள் (Minutes) பின்வருமாறு :

**கல்வெட்டுப் பிரிவு**

1. முன்பு படியெடுத்துப் பதிப்பிப்பதற்குத் தயாராக உள்ள கும்பகோணம் (189), தஞ்சாவூர் (187+118) வட்டங்கள், திருவேள்விக்குடிக் கல்வெட்டுகள் (54) பதிப்பித்து (CD by Sponsorship) வெளியிடுவதற்கு ஆவன மேற்கொள்ளலாம்.

2. கல்வெட்டுப் பிரிவில் பதிப்பிக்கத் தயாராக உள்ள ஓலைச்சுவடிகள் திருப்பதி வண்ணவிருத்தம், கார் மாலை வசந்தமாலை ஆகியவற்றையும் (CD) வெளியிட ஆவன மேற்கொள்ளலாம். மதுரை வட்ட புதிய கல்வெட்டுகளையும் வெளியிடலாம்.

மேற்கூறிய நூல்களை வெளியிடுவதற்கு ஆர்வம் உடைய நிதி தருபவர்களை கண்டு ஆவன மேற்கொள்ளலாம்.

3. இவ்வாண்டில் கல்வெட்டுப் படியெடுக்க திட்டமிடப் பட்டுள்ள சீர்காழி வட்டம், நாகபப்பட்டினம், கும்ப கோணம் வட்டம், நன்னிலம் வட்டம், திருவாரூர் வட்டம், மதுரை வட்டம் ஆகிய இடங்களுக்கு முகாம் மேற்கொள்ள நிதி ஒதுக்கீட்டுக்கு ஏற்றவாறு ஆவன மேற்கொள்ளலாம் (Optical Camera நிழற்படக்கார ருடன் ஒரு கல்வெட்டாய்வாளர் சென்று Digital Camera-வில் படம் பிடித்து கணிணியில் பதிவு செய்து கொள்ளுதல்)

4. 1. கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்களை தேர்ந்தெடுக்கப்பட்ட சில வரலாற்றுச் சிறப்பிடங் களுக்கு அழைத்துச் செல்லலாம்,

2, அகழாய்வில் கலந்து கொள்ளலாம்.

3. கருத்தரங்குகளில் சொந்த விருப்பத்தின் பேரில் கலந்து கொள்ளலாம்.

4. கோயிற் கல்வெட்டுகளைப் படியெடுக்கும் பொழுது மாணவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

5. ஆய்வு நூல்களை (CD) வெளியிட ஆவன செய்யலாம்.

6. அரசு அருங்காட்சியகத்தில் 15 நாட்கள் கணிப் பொறி மூலம் தொல்பொருட்களை ஆவணப்படுத்தல் பயிற்சி அளிக்கலாம்.

7. இரசாயனப் பயிற்சியினை இரசாயனர் திரு. அசோக்தீன் அல்லது அருங்காட்சியகத்தில் அளிக் கலாம்.

8. கல்வெட்டு இதழிலேயே தொல்லியல் துறை ஆய்வாளர்களின் அரிய கண்டுபிடிப்புகளையும் பணி களையும் செய்திகளாக வெளியிடலாம்.

9. சிறப்புச் சொற்பொழிவுகளை தொல்லியல் துறை யும், அருங்காட்சியகமும் இணைந்து நடத்தலாம்.

10. கல்வெட்டுப் பயிலரங்கம் நடத்தலாம்.

11. கல்வெட்டுப் பயிற்சி நிறுவன வகுப்புகள் (2002 - 2003) நடத்த ஆவன மேற்கொள்ளலாம்.

5. துறை வெளியீடுகளை மறு பதிப்பாக வெளியிடலாம். துறை வெளியீடுகள் ஒவ்வொன்றிலும் 15 பிரதிகளை நூலகத்தில் சேர்க்க வேண்டியது அவசியமாகும். எனவே இதற்கு நிலையான ஆணையிடப்படுகிறது. கல்வெட்டுப் பயிற்சி நிறுவன முன்னாள் மாணவர்களின் ஆய்வேடுகளை நூலாக (குறுந்தகடுகளில்) வெளியிடலாம்.

6. தமிழ்நாட்டுக் கோயில்களில் உள்ள கல்வெட்டுகளை மத்தியத் தொல்லியல் துறை படியெடுத்து மைசூர் அலுவலகத்தில் வைத்துள்ளது. 1910-ஆம் ஆண்டு வரை எடுத்த கல்வெட்டுகள் மட்டுமே பதிப்பிக்கப் பட்டுள்ளன. பதிப்பிக்கப்படாமல் உள்ள கல்வெட்டுப் படிகளை Optical Camera மூலம் நிழற்படம் எடுத்து, உரிய ( Acknowledgement ) ஒப்புகையை உடன் வெளியிட மத்தியத் தொல்லியல் துறைக்கு அரசு மூலமாகக் கடிதம் எழுத ஆவன செய்தல் வேண்டும். இதனால் படியெடுத்த கல்வெட்டுகளை விரைவில் வெளியிட இயலும். இது தொடர்பாக ஆணையர் மத்தியத் தொல்லியல் துறைக் கல்வெட்டாய்வாளரிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார்.

7. தற்பொழுது கல்வெட்டுப் படியெடுக்கும் முறையில் கல்வெட்டுகளைப் படியெடுக்காமல், பாண்டிச்சேரி இந்தியவியல் நிறுவனம் மற்றும் சில தனியார்கள் எடுக்கும் முறையில் படியெடுத்து, நன்றாக வரும் என்றால் அம்முறையைக் கடைபிடிக்கலாம். புதுக் கோட்டையில் வருகிற 12-ஆம் தேதி கல்வெட்டு படி யெடுக்கும் முறை குறித்து செயல்முறைக்கு ஆவன மேற் கொள்ளலாம். அங்கே முனைவர் ஒய். சுப்புராயலு,

முனைவர் கோ. விசயவேணுகோபால், முனைவர் புலவர் செ. இராசு மற்றும் கல்வெட்டுத் தொழில் நுட்ப அறிஞர்களுடன் விவாதித்து, பரீட்சார்த்தமாக செயல் விளக்கம் நடத்தப்பட்டு அறிஞர் அனைவரும் இம்முறையை மேற்கொள்ளலாம் என்று ஒரு மனதாகக் கருத்துத் தெரிவித்தனர்.

8. தொல்லியல் துறை அகழ்வைப்பகங்களில் உள்ள தொல்பொருட்களை சரியாக உள்ளனவா என்று ஆய்வு செய்ய ஒவ்வொரு அகழ்வைப்பகங்களுக்கும் அருகில் உள்ள மற்றொரு உதவி இயக்குநர் நிலையில் உள்ள அலுவலர், காப்பாட்சியருக்கு ஆணை வழங்கலாம்.

அகழாய்வுப் பிரிவு

1. 2002-2003 திட்டத்தில் கங்கைகொண்டசோழபுரம், மாளிகைமேடு, மதுரை திருமலை நாயக்கர் மகால் பகுதிகளில் அகழாய்வு மேற்கொள்ள ஆவன மேற் கொள்ள வேண்டும்.
2. கடலூர் மாவட்டத்தில் 1999-2000 ஆண்டில் நடை பெற்ற மாளிகைமேடு அகழாய்வு அறிக்கையைத் தயார் செய்து CD ஆக வெளியிடலாம்.
3. தொல்லியல் துறை மேற்கொண்ட 23 அகழாய்வு பற்றிய குறிப்புகளை நிழற்படத்துடன் CD ஆகவும், ஆங்கிலத்திலும், தமிழிலும் சிறு நூலாகவும் வெளி யிடலாம்.

வரலாற்றுக்கு முந்தைய கால அகழாய்வுப் பிரிவு

1. வரலாற்றுக்கு முந்தைய காலப் பகுதிகளைக் கண்டறிய ஆய்வு மேற்கொள்ளலாம்.
2. அத்திரம்பாக்கத்தில் தொல்பழங்காலப் பகுதியைப் பாதுகாக்கவும், ஆய்வறிஞர்கள் சென்று ஆய்வு செய்ய வும் வசதிகள் செய்ய ஆவன மேற்கொள்ளுதல்.

ஒப்பம்
ஆணையர்

## அலுவலக நடவடிக்கைக் குறிப்புகள் - II

**6-5-2002** அன்று சென்னை, ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற தொல்லியல் துறையின் மாவட்டத் தொல்லியல் அலுவலர்கள், மற்றும் பாதுகாப்புப் பிரிவு இளநிலைப் பொறியாளர்கள், பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகள் (Minutes) வருமாறு :

முன்னிலை: ஆணையர் **முனைவர் ரா. கண்ணன்**, இ.ஆ.ப.

ந.க எண். ஆ5/2623/02 நாள்: **13-5-2002**

கூட்டம் தொல்லியல் மற்றும் அருங்காட்சியக ஆணையர் முனைவர் ரா. கண்ணன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பங்கு பெற்றோர் விவரம்:

1. திரு. **மா. சந்திரமூர்த்தி**, பதிவு அலுவலர், சென்னை
2. திரு. **கி. ஸ்ரீதரன்**, உதவி கல்வெட்டுக் கண்காணிப்பாளர், சென்னை
3. திரு. **ச. கிருஷ்ணமூர்த்தி**, தொல்லியல் அலுவலர், சிதம்பரம்
4. திரு. **ஆர். செல்வராஜ்**, தொல்லியல் அலுவலர், சென்னை
5. திரு. **மா. செந்தில்செல்வகுமரன்**, தொல்லியல் அலுவலர், திருநெல்வேலி
6. திரு. **சொ. சாந்தலிங்கம்**, தொல்லியல் அலுவலர், மதுரை
7. திரு. **ச. செல்வராஜ்**, தொல்லியல் அலுவலர், தருமபுரி
8. திரு. **தி. சுப்பிரமணியம்**, தொல்லியல் அலுவலர்' தஞ்சாவூர்

9. திரு. பொ. கௌதமபுத்திரன், தொல்லியல் அலுவலர், கோயம்புத்தூர்

பாதுகாப்புப் பிரிவு:

1. திரு. நா. கிருஷ்ணமூர்த்தி, உதவி செயற்பொறியாளர், சென்னை
2. திரு. கோ. தேவராஜ், இளநிலைப் பொறியாளர், சென்னை
3. திரு. கோ. குணசேகரன், இளநிலைப் பொறியாளர், மதுரை
4. திரு. இரா. நாராயணன், இளநிலைப் பொறியாளர், இராமநாதபுரம்
5. திரு. இரா. சுவாமிநாதன். இளநிலைப் பொறியாளர், தஞ்சாவூர்
6. திருமதி எஸ். இராஜம், இளநிலைப் பொறியாளர்' சென்னை
7. திருமதி சீ. கமலா, இளநிலைப் பொறியாளர், திருச்சி

1. வரலாற்றுச் சின்னங்களின் பாதுகாப்பை மேம் படுத்துதல்

அ) வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்குப் பகுதி நேரக் காவலர்களாக சின்னத்தின் அருகாமையிலுள்ள நிலச் சொந்தக்காரர்களை நியமித்தல்

ஆ) தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த முறையில் பாதுகாப்பு பணி மேற்கொள்ளல்

இ) வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலம் உள்ளூர் ஆட்களை நியமனம் செய்தல்
இதில் அந்தச் சூழ்நிலையில் எது சிறந்ததோ அதன்படி செயல்படுத்துதல்

2. அனைத்து நினைவுச் சின்னங்களிலும் உள்ள முக்கிய மான சிற்பங்களையும் 6X Digital Camera மூலம் புகைப்படம் எடுக்கலாம். ஜப்பானிய நிதி உதவி கோரப்பட்டுள்ளபடியினால் அதன்மூலம் கிடைக்கும் கருவிகளைக் கொண்டு புகைப்படம் எடுக்கலாம்.

3. அனைத்து வரலாற்றுச் சின்னங்களிலும் உரிய முறை யில் தகவல் பலகைகள் Enamel Boards அமைக்கப் படல் வேண்டும். இந்தியத் தொல்லியல் துறை மேற் கொண்டுள்ள முறையைத் தழுவி இப்பணியைச் செய்தல் வேண்டும். அதே தரத்தில் இருக்க வேண்டும்.

4. வரலாற்றுச் சின்னங்களைப் பற்றி ஆங்கிலத்திலும், தமிழிலும் வண்ணப்படங்களுடன் நவீன முறையில் கையேடுகள் (அருங்காட்சியகத்தில் போட்டுள்ளபடி) தயாரித்து வெளியிட வேண்டும்.

5. நிதி நிலையைக் கருத்தில் கொண்டு மாதம் எத்துணை நாட்கள் முடியுமோ அத்துணை நாட்கள் மட்டும் தொல்லியல் அலுவலர்கள் ஊராய்வுப் பணி முகாம் மேற்கொள்ளல் வேண்டும்.

6. தங்கள் பணி எல்லைக்குட்பட்ட மாவட்டங்களில் அரசு மற்றும் பிற நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் அகழாய்வுகளில் அவ்வப்போது சென்று கலந்து கொள்ளல் வேண்டும்.

7. முகாமின் போது கண்டறியப்படும் உதிரிச் சிற்பங்கள் மற்றும் பிற தொல்பொருட்களைச் சேகரிப்பதற்கு அவ்வப்பகுதியில் உள்ள அரசு அருங்காட்சியகங் களுக்குத் தெரிவித்தல் வேண்டும்.

8. சுற்றுலாத் துறையினர் கேட்கும் வரலாற்றுக் குறிப்பு களை தலைமை அலுவலகத்தின் மூலமாக வழங்குதல் வேண்டும்.

9. அயல்நாட்டு மற்றும் உள்நாட்டு முக்கியப் பிரமுகர்கள் வருகை தரும் போதும் அவ்வவ் மாவட்ட ஆட்சியர் களின் ஆணைக்கு ஏற்பவும் வரலாற்றுச் சின்னங்கள் தொடர்பான விளக்கங்கள் அளிக்க வேண்டும்.

10. அவரவர் பணி எல்லைக்கு உட்பட்ட வரலாற்றுச் சின்னங்களைத் தொல்லியல் அலுவலர், இளநிலைப் பொறியாளர் ஆகியோர் அடிக்கடி பார்வையிடுதல் வேண்டும்.

11. தங்கள் பகுதியில் உள்ள நினைவுச் சின்னங்களின் அமைவிடம், பரப்பு, சர்வே எண் போன்ற விவரங் களை வருவாய்த் துறை பதிவேட்டில் பதிவு செய் வதற்கு ஏற்ற வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்கு அனுப்புதல் வேண்டும். இதன் நகல் ஒன்று (CRA Commissioner for Revenue Administration) அவர்களுக்கும் அனுப்புதல் வேண்டும்.

12. வரலாற்றுச் சின்னங்களின் அருகிலேயே இனிவருங் காலங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளுதல் வேண்டும். அகழாய்வுக்குப் பின் அவ்விடம் கட்டாயம் பாதுகாக்கப்பட வேண்டும். அவ்விடங்களில் ஒப்பனை அறை வசதிகள் (Toilet) குளிர்பான அங்காடிகள், உந்து வண்டி நிற்குமிடங்கள், குப்பைத் தொட்டிகள் ஆகியவைகள் இடம் பெறுதல் வேண்டும்.

13. வரலாற்று முக்கியம் வாய்ந்த சின்னங்களையே பாது காத்தல் வேண்டும். வரலாற்றுச் சிறப்பற்று, கலைத் தன்மை மிக்கக் கட்டிடங்கள் இல்லாத சின்னங்களை, வரலாற்றுச் சின்னங்களாக ஆக்கப்பட்டுள்ளவைகளை சின்னங்களின் பட்டியலிலிருந்து எடுத்து விடலாம். எடுத்துக்காட்டாக வந்தவாசி கோட்டை, அரண்மனை சிறுவயல் மருதுபாண்டியர் கோட்டை, மதுரை

கோவலன்பொட்டல் முதலியவைகள். வந்தவாசியில் கோட்டையில் உள்ள பீரங்கியை வேலூர் அருங் காட்சியகத்திற்கு எடுத்துச் சென்றுவிடலாம்.

14. வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல், தொல் லியல் தொடர்பான ஆய்வு நூல்களை வெளியிடுதல், கருத்தரங்கு நடத்துதல் ஆகியவற்றுக்கு தனியார் நிறுவனங்களின் தன்னார்வ உதவிகளை மனமுவந்து ஏற்கலாம்.

15. திருமலை நாயக்கர் அரண்மனையில் பணிக்காக வாங்கி வைக்கப்பட்டு மீதமுள்ள சிமெண்ட் மூட்டை களை பயன்படுத்த முடியுமா என்பதற்கு மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை உதவி இயக்குநர், சென்னை உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி கணக்கு அலுவலர் ஆகியவர்கள் கொண்ட குழுவினை அமைத்து, சிமெண்டினை பயன்படுத்துவது பற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டு ஆவன செய்ய வேண்டும்.

16. அகழாய்வுகள் செய்த பிறரு அவ்விடத்தைப் பாது காப்பதற்கும் மழை நீர் தேங்காத வண்ணம் நீரை வெளியேற்றும் சுரங்கைத் தூம்பு (Underground drainage) அமைத்தல் வேண்டும். கங்கைகொண்ட சோழபுரம், மாளிகைமேட்டிலும், பூம்புகார் படகுத் துறையிலும் இத்தகு வடிகுழாய் அமைப்பதற்கு தொல்லியல் அலுவலர் மற்றும் இளநிலைப் பொறி யாளர் மேற்கொள்ள வேண்டும்.

17. மதுரை மாவட்டம், திருவாதவூரில் பகுதி நேரக் காவ லராகப் பணிபுரியும் திரு. உத்தண்டியப்பன் என்பவரின் மதிப்பூதியத்தை மதுரையிலேயே பெற்று வழங்கலாம். மற்ற பகுதி நேரக் காவலர்களுக்கு வழங்குவது போன்று (சுமார் 600) ஊதியம் வழங்கவும் ஆவன செய்யலாம்.

18. காஞ்சிபுரம் மாவட்டம், ஆம்பரைக் கோட்டையில் உள்பகுதியில் அகழாய்வு செய்தால் கட்டிடப் பகுதிகள் கிடைக்கும் வாய்ப்புகள் உள்ளதாகத் தெரிவதால் இதனை அகழாய்வாளர் ஆய்வு செய்து பணியை சுற்றுலாத்துறை அளிக்கும் நிதி உதவியினைக் கொண்டு மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டும். கோட்டையின் ஆங்காங்கே சிதைந்துள்ள சுவர்களைச் சீர் செய்யும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒப்பம்
ஆணையர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அச்சகத்தில் அச்சிட்டு தொல்லியல் (ம) அருங்காட்சியகத்துறை ஆணையர் முனைவர் ரா. கண்ணன், இ.ஆ.ப, அவர்கள் சார்பாக முனைவர் ஆ. பத்மாவதி கல்வெட்டாய்வாளரால் வெளியிடப்பெற்றது.